கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 148 | 03-12-2025 | புதன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 148 | 03-12-2025 | Wednesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## தொடர் அமளி: எதிர்க்கட்சி எம்.பி.க்களுடன் மக்களவை சபாநாயகர் பேச்சுவார்த்தை



"டெல்லி, டிச.3–

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த கூட்டத்தொடரில் பல்வேறு முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதேவேளை, வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி, டெல்லி கார் குண்டு வெடிப்பு சமபவம், வாக்கு திருட்டு குற்றச்சாட்டு, டெல்லி காற்று மாசுபாடு உள்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவதம் நடத்த வேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. மேலும், இந்த பிரச்சினைகளை முன்வைத்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் 2வது நாளாக இன்றும் அமளியில் ஈடுபட்டன. இதனால் அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தொடர் அமளியில் ஈடுபட்டு வரும் எதிர்க்கட்சி எம்.பி.க்களுடன் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த பேச்சுவார்த்தையில் மக்களவையை சுமூகமாக நடத்த ஆதரவு அளிக்குமாறு எதிர்க்கட்சி எம்.பி.க்களிடம் சபா நாயகர் கோரிக்கை வைத்தார். அதேவேளை, வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணி குறித்து விவாதிக்க அனுமதிக்குமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ",

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்: தமிழ்நாட்டில் 632 மருத்துவ முகாம்களில் 9.86 லட்சம் பேர் பயன் பெற்றனர்

சென்னை. டிச. 3–

"தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் (2.12.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. 202526ம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், உயர் மருத்துவ சேவைகள் வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், 2.8.2025 அன்று சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கி வைத்தார்.



இந்த உயர் மருத்துவ சேவை சிறப்பு முகாம் ஒன்றிற்கு 1.08 லட்சம் ரூபாய் வீதம் மாநிலம் முழுவதும் மொத்தம் 1,256 முகாம்களுக்கு ரூ.13.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாம்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சிக் குன்றிய குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூகபொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் மாநிலம் முழுவதும் இதுவரை 632 முகாம்கள் நடத்தப்பட்டு, 9,86,732 பேர் பயனடைந்துள்ளனர். இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதல் அமைச்சர், நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களுக்கு வரும் மக்களுக்கு குடிநீர், இருக்கை வசதிகள், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்றும், முகாம்களுக்கு வருகை தரும் மக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கிட போதுமான அளவிற்கு தன்னார்வலர்களை நியமிக்க வேண்டும் என்றும் அறிவுறுத் தினார். மேலும், முகாம் கள் நடைபெறுவது குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்து, மக்களுக்கு முகாம்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்றும், தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்காக தனியாக அறை ஏற்படுத்திட வேண்டும் என்றும், வருகை தரும் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு முகாம்களில் உரிய வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் முதல் அமைச்சர், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அத்துடன் இம்முகாம்களில் நோய் கண்டறியப்பட்டு, மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்படுபவர்கள் தொடர் சிகிச்சை மேற்கொள்வதை உறுதி செய்திட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் ஆர்.லால்வேனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் எஸ்.மதுமதி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமிபிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ",

## ஐ.பி.எல். ஏலம்: அடிப்படை விலை ரூ.2 கோடியில் இடம்பெற்றுள்ள இரு இந்தியர்கள் மட்டுமே.. யார் யார் தெரியுமா..?

சென்னை, டிச.3–

19வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்கள் மினி ஏலம் வருகிற 16ந் தேதி அபுதாபியில் நடக்கிறது. இதையொட்டி தக்கவைக்கப்படும் வீரர்கள் மற்றும் விடுவிக்கப்படும் வீரர்களின் பட்டியலை கடந்த 15ந் தேதி இந்திய கிரிக்கெட் வாரியத்திடம் 10 அணிகளும் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டு இருந்தது. அதன்படி ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்கும் 10 அணிகளும் விடுவித்த வீரர்கள் மற்றும் தக்கவைத்த வீரர்கள் விவரம் அதிகாரபூர்வமாக வெளியிட்டன. மொத்தம் 173 வீரர்கள் தக்க வைக்கப்பட்டு உள்ளனர். இந்நிலையில் இந்த ஏலத்தில் மொத்தம் 1,355 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். அதன்படி 1,062 இந்திய வீரர்கள் மற்றும் 293 வெளிநாட்டு வீரர்கள் ஏலத்தில் தங்களது பெயர்களை பதிவு செய்துள்ளனர். இதனை ஐ.பி.எல். நிர்வாகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. வீரர்களுக்கான அடிப்படை விலை குறைந்தபட்சம் ரூ. 30 லட்சம் என்றும் அதிகபட்சம் ரூ. 2 கோடி என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சர்வதேச போட்டிகளில் ஆடிய திறமையான வீரர்கள் பலரும் ரூ.2 கோடி என்ற அடிப்படை விலையில் இடம்பெற்றுள்ளனர். அவர்களின் ஆரம்ப விலை ரூ.2 கோடியிலிருந்தே தொடங்கும். இந்நிலையில் இந்த மினி ஏலத்தில் அதிகபட்ச தொடக்க விலையான ரூ.2 கோடிக்கு வெங்கடேஷ் ஐயர், ரவி பிஷ்னாய் ஆகிய இரு இந்திய வீரர்கள் மட்டுமே பதிவு செய்துள்ளனர். மொத்தம் 45 வீரர்கள் இப்பிரிவில் தங்களது பெயர்களை பதிந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ",

## அவையில் பேச அனுமதி கேட்டால், அமளி செய்வதாக பாஜக குற்றம்சாட்டுகிறது : திருச்சி சிவா பேட்டி

திருச்சி: டிச.3

எதிர்க்கட்சிகள் பேச அனுமதி மறுப்பதை ஒரு வேலையாகவே பாஜக வைத்துள்ளது என திருச்சி சிவா பேட்டி அளித்துள்ளார். எதிர்க்கட்சிகள் பேச அனுமதிதான் கேட்கிறோம்; அவைக்கு குந்தகம் விளைவிக்கவில்லை. அவையில் பேச அனுமதி கேட்டால் அமளி செய்வதாக பாஜக கூறுகிறது. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் 15 நாட்கள் நடந்ததே இல்லை என தெரிவித்தார்.

## முன்னாள் இந்திய கடலோர காவல் படை , முன்னாள் இந்திய கடற்படை வீரார்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு: தமிழ்நாடு காவல்துறை

சென்னை: டிச.3–

முன்னாள் இந்திய கடலோர காவல் படை , முன்னாள் இந்திய கடற்படை வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக தமிழ்நாடு காவல்துறை அறிவித்துள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் தமிழ்நாடு காவல்துறையில் கடலோர பாதுகாப்புக்; குழுமத்திலுள்ள அதிவிரைவுப்படகுகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் (தேவைப்பட்டால், நீட்டிக்கப்படலாம்) பணிபுரிய 01.12.2025 நாளன்று 50 வயதுக்குக் கீழுள்ள தகுதி வாய்ந்த முன்னாள் இந்திய கடலோர காவல் படை மற்றும் முன்னாள் இந்திய கடற்படை வீரார்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பதவி : காவல் உதவி ஆய்வாளர் (படகு தொழில்நுட்ப ஆளிநர்

ஊதியம்: ரூ.36,900 மற்றும் இதர படிகள்

பணியிடங்கள்: 10

பதவி: தலைமை காவலர் ( படகு தொழில்நுட்ப ஆளிநர்)

ஊதியம்: ரூ.20600 மற்றும் இதர படிகள்

பணியிடங்கள்: 41

தகுதியான விண்ணப்பதாரரர்கள் தங்களது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தின்படி உரிய ஆவணங்களுடன் கூடுதல் காவல் துறை இயக்குநர். கடலோர பாதுகாப்பு குழுமம். காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகம். டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை4

என்ற முகவரிக்கு 17.12.2025க்குள் தபால் மூலம் அனுப்பலாம். தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே சான்றிதழ் சரிபார்ப்பு, எழுத்து தேர்வு, வாய்மொழி தேர்வு போன்றவற்றுக்கு தனிப்பட்ட அழைப்பு கடிதங்கள் மூலம் அழைக்கப்படுவார்கள். ஆட்சேர்ப்பு, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. தகுதி, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், மாதிரி விண்ணப்ப படிவம் பின்வரும் இணையதள இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். என தெரிவிக்கப்பட்டது

## புதுவையில் விஜய் ரோடு ஷோ நடத்த காவல்துறை அனுமதி மறுப்பு

"புதுச்சேரி, டிச.3–

அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டசபை தேர்தலை முன்னிட்டு த.வெ.க. தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தி வருகிறார். அதன்படி புதுச்சேரியில் வருகிற 5ந்தேதி த.வெ.க. சார்பில் விஜய் பங்கேற்கும் ரோடு ஷோ காலாப்பட்டு முதல் கன்னியக்கோவில் வரை நடத்த போலீஸ் டி.ஜி.பி. அலுவலகத்தில் கடந்த 26ந் தேதி அனுமதிக்கேட்டு கடிதம் வழங்கப்பட்டது. ஆனால் போலீஸ் தரப்பில் இதுபற்றி இன்னும் முடிவு எடுக்கப்பட வில்லையாம். இந்தநிலையில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு இன்னும் 2 நாட்களே இருக்கும்பட்சத்தில் இதுவரை போலீஸ் அனுமதி வழங்காததால் த.வெ.க.வினர் என்ன செய்வது என்று குழப்பத்தில் உள்ளனர். இதற்கிடையே புதுவை போலீஸ்ஐ.ஜி. அஜித்குமார் சிங்லாவை அவரது அலுவலகத்தில் த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் நேற்று சந்தித்து, விஜய்யின் மக்கள் சந்திப்பு அனுமதி தொடர்பாக பேசினார். ஆனால் ரோடு ஷோ நடத்த போலீஸ் தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டது. இதையடுத்து புஸ்சி ஆனந்த் முதல் அமைச்சர் ரங்கசாமியை சட்டசபையில் சந்தித்தார். இந்த சந்திப்பு சுமார் 10 நிமிடங்கள் வரை நடந்தது. தொடர்ந்து அமைச்சர் லட்சுமி நாரராயணனையும் சந்தித்து பேசினார். இதற்கிடையே புதுவை உப்பளம் ஹெலிபேடு மைதானத்தில் கூட்டம் நடத்துவது தொடர்பாக புஸ்சி ஆனந்திடம் போலீஸ் தரப்பில் பரிந்துரை செய்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக இன்று (செவ்வாய்க்கிழமை) இறுதி முடிவு எடுக்கப்படும். கரூர் துயர சம்பவத்தை காரணம் காட்டி ரோடு ஷோவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. விஜய்க்கு அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக, புதுவை சபாநாயகர் செல்வம் கூறியதாவது புதுச்சேரி சிறிய நகரம் தமிழகத்தை போன்று மிகப்பெரிய சாலைகள் இல்லை. ஆகவே விஜய்யின் ரோடு ஷோவிற்கு அனுமதி வழங்காதது நல்லது. வேண்மென்றால் தனியாக மைதானம் போன்ற இடத்தில் கூட்டம் நடத்தி கொள்ளலாம்' என்று கூறினார். ",



சர்வதேச அடிமைத்தன ஒழிப்பு நாளை யொட்டி ஈரோடு மாட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழிலாளர் துறை சார்பில் மனித கடத்தல் மற்றும் கொத்தடிமை தொழில் முறை ஒழிப்பு குறித்த மாவட்ட அளவிலான பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி துவக்கி வைத்து பேசினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, ஈரோடு தொழிலாளர் உதவி ஆணையர் ஜெயலட்சுமி, உயர்நீதிமன்ற வழக்கிறஞர்கள் நடராஜன், பிரபு ஆகியோர் உள்ளனர்.

## பாமக தலைவராக அன்புமணிக்கு அங்கீகாரம்: தேர்தல் ஆணைய முடிவுக்கு எதிராக ராமதாஸ் வழக்கு




புதுடெல்லி, டிச.3

பாமக தலைவராக அன்புமணி ராமதாசை அங்கீகரித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, டெல்லி ஐகோர்ட்டில் பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பு வழக்கு தொடர்ந்துள்ளது. தங்களது தரப்பு அளித்த அசல் ஆவணங்களை ஆய்வு செய்யாமல் இந்த முடிவை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளதாக மனுவில் கூறப்பட்டுள்ளது. பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸுக்கும் அவரது மகன் அன்புமணிக்கும் இடையே கடந்த சில மாதங்களாக மோதல் நிலவி வருகிறது. இந்நிலையில், பாமகவுக்கு தானே தலைவர் என்றும், தங்களுடைய தரப்புக்கு கட்சியின் சின்னமான 'மாம்பழம்' ஒதுக்க வேண்டும் என்றும், இந்திய தேர்தல் ஆணையத்திற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் சமீபத்தில் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். ராமதாஸ் கடிதத்துக்கு பதில் அளித்த தேர்தல் ஆணையம், அன்புமணிதான் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் என அறிவித்தது. இந்த கடிதம் பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பினருக்கு அதிர்ச்சியும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. இந்த விவகாரத்தை சட்ட ரீதியாக அணுகுவோம் என்று ராமதாஸ் கூறிய நிலையில், டெல்லி ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.",

# சேலத்திலிருந்து புதிதாக 10 நகர்ப்புற பேருந்துகள் அமைச்சர் ரா.ராஜேந்திரன் தொடங்கி வைப்பு

சேலம். டிச.2–

சேலத்தில் இருந்து புதிதாக 10 நகர்ப்புற பேருந்துகளை சுற்றுலாத் துறை அமைச்சர் ரா. ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்.

சேலம் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து புதிய பேருந்துகள் மற்றும் வழித்தட மாற்றம், வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்ட பேருந்துகளை தொடங்கி வைத்து, பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு போக்கு வரத்துக் கழக பணியாளர் களின் வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி அமைச்சர் பேசியதாவது:



பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்கள், ஏற்கெனவே இயங்கிவந்த வழித்தடங் களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவைகளை திமுக அரசு வழங்கி வருகிறது. சேலம் மாவட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் இதுவரை 173 புதிய பேருந்துகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட சேலம் கோட்டத்தில் 180 மகளிர் விடியல் பயணப் பேருந்துகள், 195 புறநகர்ப் பேருந்துகள் என மொத்தம் 375 பேருந்துகள் தொடங்கி வைக் கப்பட்டுள்ளன. மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் கீழ் 42.46 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

சேலம் நகர பேருந்து நிலையத்தில் இருந்து புதிதாக 10 நகரப் பேருந்துகள் தொடங்கி வைக் கப்பட்டுள்ளன. இதுதவிர, பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 8 நகரப் பேருந்துகள் வழித்தடம் மாற்றம் செய்தும், 12 நகரப் பேருந்துகள் வழித்தடம் நீட்டிப்பு செய்தும், 2 புறநகர் பேருந்துகள், 1 நகர பேருந்து மூலம் 3 புதிய பேருந்து நிறுத்தங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், அரசாணையின் மூலம் பணியமர்வில் மகளிருக்கான உயரம் 150 செமீ ஆககுறைக்கப்பட்டது. இதன்மூலம் 36 மகளிர் தற்போதுவரை பயனடைந் துள்ளனர் என்றார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் ஆ. ராமச்சந்திரன், அரசு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன், பொது மேலாளார் (தொழில் நுட்பம்) ந.கலைவாணன், முதுநிலை துணை மேலாளர் (மனிதவள மேம்பாடு) க.ராஜராஜன் மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் மாநகராட்சி பகுதியில் பொதுமக்கள் குப்பைகளை தரம் பிரித்து தரவேண்டும்

## மேயர் தினேஷ் குமார் அறிவிப்பு



திருப்பூர் டிசம்பர் =3

திருப்பூர் மாநகராட்சி 60 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகள் பயன்பாடுகள் இல்லாத பாரக்குழியில் கொட்டப்பட்டு வந்தது இதனிடையே பல்வேறு இடங்களில் பாரக்குழி களில் குப்பை கொட்டு வதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்த காரணத்தால் மாநகரத்தில் குப்பைகள் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது இது குறித்து மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில், மாநகராட்சி ஆணையர் அமித் மற்றும் அதிகாரி களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து மேயர் தினேஷ்குமார் நிருபர்களிடம் கூறியதாவது: மாநகராட்சியில் 60 வார்டுகளில் சேசுரமாகும் குப்பைகளை அப்புறப் படுத்துவது தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டமானது நடைபெற்றது. இதில் ஒவ்வொரு வீடுகளிலும் பொதுமக்கள் குப்பைகளை தரம் பிரித்து கொடுக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது. முதல் கட்டமாக இந்த ஒரு மாதம் அபராதம் இன்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். தொடர்ந்து பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அடுத்த மாதம் முதல் குப்பைகளை தரம் பிரித்து வழங்காத பொதுமக்களிடமிருந்து குப்பைகள் பெறப்படாது. அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகரில் குப்பைகள் தேங்கி கிடப்பதை எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது. அதற்கு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் வழக்கும் நீதிமன்றத்தில் இருப்பதால் அதனைப் பற்றி தற்பொழுது பேச முடியாது இடுவாய் பகுதியில் குப்பை கிடங்கு அமைப்பதற்கான நிலுவையில் இருப்பதால் அது தொடர்பாகவும் கருத்துக்கள் தெரிவிக்க முடியாது. ஆனால் இடுவாய் மக்களிடம் அது தொடர்பாக ஒவ்வொருவரிடமும் உரிய விளக்கம் அளிக்கப்பட்டது. இருப்பினும் ஒரு சிலரின் சுயலாபத்திற்காக போராட்டம் நடைபெறுவதாகவும் நீதிமன்ற தீர்ப்பு வந்தவுடன் இடுவாய் அங்குள்ள மக்களுக்கு உண்மையை தெரிவிப்பேன் என தெரிவித்தார்

# உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு (ம) கட்டுப்பாடு அலகு சார்பில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் ரூ.2.24 லட்சம் மதிப்பிலான நல திட்டங்களை வழங்கினார்:



திருவள்ளூர் டிச 03 :

திருவள்ளூர் மாவட்ட அலுவலக கூட்டரங்கில் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு (ம) கட்டுப்பாடு அலகு சார் பில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் எச்.ஐ.வி.எய்ட்ஸ் விழிப் புணர்வு கையெழுத்து இயக்கத்தை கையெழுத் திட்டு தொடங்கி வைத்தார்.


இந்நிகழ்ச்சியில் தொடர்ந்து, எச்.ஐ.வி.எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனியார் தொண்டு நிறுவனம் வாயிலாக வாழ் வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஏ.ஆர்.டியில் சிகிச்சை பெறுபவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த 8 நபர்களுக்கு தையல் இயந்திரமும், 5 நபர்களுக்கு சுயதொழில் செய்ய தள்ளுவண்டி, 2 நபர்களுக்கு சிற்றுண்டி கடைக்கு தேவையான பொருட்கள், 1 நபருக்கு வியாபாரம் செய்ய வீடு சுத்தம் செய்யும் பொருட் கள், 2 நபர்களுக்கு வியாபாரம் செய்ய மொத்தம் 18 நபர்களுக்கு ரூ.2.24

இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் விழிப்புணர்வு உறுதிமொழியையும், எச்.ஐ.வி.எய்ட்ஸ் தடுப்பு பணியில் சிறப்பாக பணியாற்றிய தொண்டு நிறுவனங்களை பாராட்டி கேடயங்களை வழங்கினார். சமபந்தி சிறப்பாக அமைய திருவள்ளூர் ரோட்டரி சங்கம் சார்பில் தேவை யான முன்னேற்பாடுகளை செய்தனர். 200க்கும் மேற் பட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு (ம) கட்டுப்பாடு அலகு மண்டல தடுப்பு அலுவலர் தை.பபிதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல் முறையாக லெட்டர் பேடை வைத்து மருதமலை முருகன் கோயிலுக்கு சென்று சிறப்பு அர்ச்சனை செய்தார்.



ஹிந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் தமிழ்நாடு மாநில துணைத் தலைவராக பதவி ஏற்ற பிறகு மருதமலையார் (எ) ஏ. கே. ஜி. சித்தார்த் அபிமன்யு முதல்முறையாக அர்ச்சனை செய்து வணங்கிவிட்டு

இந்துக்களின் பாதுகாவலர் தனது அரசியல் குருநாதர்பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றியை காணிக்கையாக்கினார்.

உலகம் எங்கும் வாழும் அனைத்து இந்து மத சொந்தங்களுக்கும் எமது இந்து மதத்தையும் இந்து மத கடவுள்கள் எமது மத கோட்பாடுகளையும் எமது பாரத தேசத்தையும் நேசிக்கும் பிற மதத்தை சார்ந்த சகோதர சகோதரிகளுக்கும் தனது இனிய திரு கார்த்திகை தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டார்.

# சேலத்தில் மாற்றுத்திறனாளிகள் கண்களில் கருப்பு துணி கட்டி ஆர்ப்பாட்டம்.



சேலம். டிச.3–

மாற்றுத்திறனாளிகளுக்கு நாடுமுழுவதும் ஒரே மாதிரியான அட்டை வழங்கி உரிய நிதி ஒதுக்க வலி யுறுத்தி, சேலத்தில் மாற்றுத்திறனாளிகள் கண்களில் கருப்பு துணி கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சேலம் கோட்டை பாரத ஸ்டேட் வங்கி முன் தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினர் சார்பில் மாவட்டத் தலைவர் அமலா ராணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை, மாவட்டப் பொருளாளர் ஜே. ஜார்ஜ் பொனான்டஸ் தொடங்கிவைத்தார்.

இதில், மாற்றுத்திறனாளிகளுக்கு மத்திய அரசு உரிய நிதியை அளிக்காமல், தொடர்ந்து மாநில அரசு மட்டுமே பங்களிப்பை செலுத்தி வருகிறது. இதனால் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய நிதி கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு உடனடியாக மாற்றுத்திறனாளிகளுக்கான நிதியை அளிக்க வேண்டும். நாடு முழுவதும் ஒரே மாதிரியான அடையாள அட்டைகளை அனைத்து உரிமைகளையும் பெறும் வகையில் தரவேண்டும். அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் 35 கிலோ இலவச உணவு தானியங்கள் வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆந்திர மாநிலத்தில் வழங்குவதைபோல தமிழகத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இதில், மாவட்டச் செயலாளர் எம்.குணசேகரன், மாற்றுத்திறனாளிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர்கள், இணைச் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தமிழக துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கோவைபுதூர் பகுதி இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது..



கோவை, டிசம்பர்.03

கோவைபுதூர் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஹரி.பரத் கிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இதில், கோவை மாநகராட்சி 91 வது வார்டு மாமன்ற உறுப்பினரும் கோவை மாநகராட்சி நியமன குழு உறுப்பினரும் ஆன முராஜேந்திரன் தலைமைவகித்தார்..

நிகழ்ச்சியில் முன்னதாக குளத்துப் பாளையம் பகுதியில் உள்ள மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் பயிலும் 500 க்கும் மேற்பட்ட மாணவ,மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களாக நோட்டு புத்தகம், பென்சில், இரப்பர், ஷார்ப்னர், மற்றும் பென்சில் பாக்ஸ் ஆகிய பொருட்கள் வழங்கப்பட்டது..

இதனை தொடர்ந்து அதே பகுதியில் உள்ள ஊர்ப்புற நூலகத்திற்கு புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பாதுகாப்பதெற்கு என புதிய அலமாரியை மாமன்ற உறுப்பினரும் கோவை மாநகராட்சி நியமன குழு உறுப்பினரும் ஆன மு.ராஜேந்திரன் அவரது சொந்த செலவில் வழங்கினார்..

இந்நிகழ்ச்சியில், பார்வதி புரம் நாகராஜ், குளத்துப்பாளையம் ராஜகோபால், குளத்துப்பாளையம் சண்முகம், காசி தர்மர், இளைஞரணி திரு வரசன், ரம்யா, ராதா, ராஜா, அருள், பிரியா ,காளிதாஸ் ,மற்றும் இளைஞர் அணி உடன்பிறப்புகள் பிரித்வி.மோகனா சுந்தர், கிருஷ்ணா இஷான் அஹ்மத், 90 வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் குவாசித் அஹமத் மற்றும் துணை அமைப்பாளர்கள் முஹம்மத் ஆசிப், சித்தார்த்.இரா, முகமது பர்ஹான், ஹரி கிருஷ்ணன், அருண் குமார் மற்றும் 91 வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா, மற்றும் துணை அமைப்பாளர்கள் பிஜு, பவித்ரன், தீபக் குமார், மணிகண்டன் உட்பட பலர் கலந்து கொண்டனர்..

# ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டம் பரப்பு பேரூராட்சி நியமன உறுப்பினர் பதவியேற்பு

ஈரோடு டிச., 3

ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டம் பரப்பு பேரூராட்சியில் நியமன உறுப்பினர் பதவி ஏற்றுக்கொண்டார்.

ஈரோடு மாவட்டம் வெள்ளாட்டம் பரப்பு பேரூராட்சியில் நியமன உறுப்பினருக்கான தேர்வு நடைபெற்றது. இதில் பாலசுப்பிரமணியன் என்பவர் மாற்றுத்திறனாளிகளுக்கான நியமன உறுப்பினர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டார். இதற்கான நியமன உறுப்பினர் பதவிப்பிரமாணம் ஏற்கும் நிகழ்ச்சி, வெள்ளோட்டம் பரப்பு பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த மாற்றுத்திறனாளிகளுக்கான நியமன உறுப்பினர் பதவிக்கான, பதவி ஏற்கும் நிகழ்ச்சியில், வெள்ளாட்டம் பரப்பு பேரூராட்சி செயல் அலுவலர் ராமச்சந்திரன், நியமன உறுப்பினர் பாலசுப்பிரமணியத்துக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் வெள்ளாட்டம் பரப்பு பேரூராட்சி தலைவர் சத்யா சண்முகம், துணைத் தலைவர் ஜெயச்சந்திரன் மற்றும் அலுவலக பணியாளர்கள் பொதுமக்கள் பங்கேற்று கலந்து கொண்டனர்.

# பத்திரப் பதிவுத் துறையில் நேற்று ஒரே நாளில் ரூ.302 கோடி வருவாய் ஈட்டி சாதனை!!

சென்னை : டிச.3–

பத்திரப் பதிவுத் துறையில் நேற்று ஒரே நாளில் ரூ.302 கோடி வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளது. ஒருநாள் வருவாய் வசூலில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளது பதிவுத்துறை என்று அமைச்சர் மூர்த்தி குறிப்பிட்டுள்ளார். நேற்று முகூர்த்த தினம் என்பதால் பத்திரப் பதிவுக்கு கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கப்பட்டன.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கல்லூரி மாணிக்கு சமூக பொறுப்பு நிதியிலிருந்து கல்வி கட்டண தொகைக்கான காசோலையினை வழங்கினார்.

## செய்தித்துறை அமைச்சருடன் இளைஞரணி அமைப்பாளர் சந்திப்பு



தமிழ்நாடு செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர்மு. பெ சாமி நாதனை, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து, சால்வை அணிவித்து சந்தித்து பேசினார்.

## திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீவைகுண்ட ஏகாதசி திருவிழாவினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் நடைபெற்றது.



திருச்சி, டிச. 3–

திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோவில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி பெருவிழா 19.12.2025 முதல் 09.01.2026 வரை நடைபெற உள்ளது. 30.12.2025 அன்று மேற்படி பரமபத வாசல் திறப்பு நிகழ்ச்சிக்கு எண்ணற்ற பக்தர்கள் வருகை தர உள்ளதை முன்னிட்டு சிறப்பான முறையில் பணிகளை மேற்கொள்ளும் வகையில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடனான ஒருங் கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன்;, தலைமையில் (02.12.2025) ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்க நாதசுவாமி திருக்கோயிலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:


காவல் துறையின் சார்பில், பொதுமக்கள் திருக்கோயிலுக்குள் வரவும், வெளியே செல்லவும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை உரிய முறையில் செய்து தருதல். முக்கிய விருந்தினர் வருகையின் போது தேவையான பாதுகாப்பு அளிப்பது, பக்தர்களின் தேவைக்கு ஏற்றார் போல் பேருந்துகளை இயக்கவும், பேருந்துகள் நிற்குமிடத்தில் பொதுமக்கள் சிரமமின்றி ஏறவும், இறங்கவும் வரிசையை ஒழுங்குபடுத்தவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 19.12.2025 முதல் 09.01.2026 வரை அனைத்து நாட்களிலும் எந்நேரமும் குடிநீர் கிடைக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், திருக்கோயில் வளாகம் மற்றும் சுற்றுப்புறத்தில் சுகாதார ஏற்பாடுகள் உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும், மேலும் அம்மாமண்டபம் படித்துறை, கொள்ளிடம் படித்துறையில் பொதுமக்கள் இரவு, பகல், எந்நேரமும் உபயோகப்படுத்திக் கொள்ளும் வகையில் அதிகப்படியான மின்விளக்குகள் அமைக்கவும் மற்றும் திருநாட்களில் பாதுகாப்பாக குளிக்கும் வகையில் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும், பக்தர்கள் வசதிக்காக நடமாடும் கழிவறைகள் தற்காலிக சிறுநீர் கழிப்பிடங்கள், கழிவறைகள் அமைத்து தர வேண்டும்,மேற்படி கழிவறைகள் அமைவிடம் குறித்த வழிகாட்டி பலகைகள் பொதுமக்களுக்கு தெரியும் வகையில் வைத்தல்,தேவையான இடங்களில் தீயணைப்பு வண்டிகள் நிறுத்த ஏற்பாடு செய்தல்,பொது மக்கள் அவசரத் தேவைக்கு இலவச மருத்துவ உதவி அளிக்க மருத்துவ குழுக்களை திருக்கோவில் வளாகத்தினுள் அமைத்துத் தருதல். ஆம்புலன்ஸ் வசதியுடன் மருத்துவக்குழுக்கள் உரிய மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுடன் தயார் நிலையில் இருந்திட வேண்டும்.

29.12.2025, 30.12.2025 மற்றும் 31.12.2025 ஆகிய முக்கிய திருநாட்களில் சிறப்பு இரயில் வண்டிகள்; இயக்கவும், அனைத்து விரைவு இரயில் வண்டிகளும் சென்ற ஆண்டுகள் போல் இந்த ஆண்டும் ஸ்ரீரங்கம் இரயில் நிலையத்தில் இயக்கவும் இரயில்வே துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திருவிழாக்காலம் முழுவதும் 19.12.2025 முதல் 09.01.2026 முடிய தடையின்றி மின்சாரத்தை வழங்கிட நடவடிக்கை மேற் கொள்ளவும், பழுது ஏற்பட்டால் உடனே நிவர்த்தி செய்ய தேவையான பணியாளர்களை தயார் நிலையில் வைத்திருத்தல். முக்கிய திருநாட்களில் அதிகப்படியான சிறப்பு பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல். சாலையின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல். சாலைகளை மேடு பள்ளம் இல்லாமல் செப்பனிட்டு சீராக பராமரித்தல், வாய்க்கால்கள் மற்றும் கழிவு நீர் தொட்டிகள் மூடியிருப்பதை உறுதி செய்தல், அன்னதானம் வழங்குபவர்கள் முறையாக உணவு பாதுகாப்புத் துறையில் பதிவு செய்து குறிப்பிட்ட இடங்களில் மட்டும் தரமான உணவு வகைகள் வழங்குவதை உறுதி செய்தல் வேண்டும், திருக்கோயில் வளாகத்திற்குள் பக்தர்களுக்கு க்யு+லைன் வரிசைகள் செய்தல். திருக்கோயிலின் அனைத்து பகுதிகளையும் கண்காணிக்கும் வகையில்சி.சி.டி.விகண்காணிப்பு கேமராக்கள் முறையாக பராமரித்தல், ஜெனரேட்டர் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும் எனவும் அனைத்துத் துறை அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாநகர காவல் ஆணையர் திருமதி. காமினி,இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி, திருச்சி மாநகர காவல் துணை ஆணையர் . சிபின்,இ.கா.ப., ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் .சீனிவாசன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் செ. சிவராம் குமார், சு.ஞானசேகரன் மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் :

## மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் பொதுமக்களிடம் 195 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு தீர்வுக்கான அலுவலர்களிடம் உத்தரவிட்டார்:



திருவள்ளூர் டிச 03

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் பொது மக்களிடம் இருந்து 195 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு தீர்வுக்கான சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உத்திரவிட்டார்.

இம் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள், தங்களது குறைகளை நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் பொது பிரச்சனைகள் தொடர்பாக உதவிகள் வேண்டியும் 195 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கினர். இதில், நிலம் சம்பந்தமாக 53 மனுக்களும் சமூக பாதுகாப்பு திட்டம் தொடர்பாக 39 மனுக் களும் வேலைவாய்ப்பு வேண்டி 35 மனுக்களும் பசுமை வீடு, அடிப்படை வசதிகள் வேண்டி 32 மனுக்களும் மற்றும் இதர துறைகள் சார்பாக 36 மனுக்களும் என மொத்தம் 195 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற் கொண்டு தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் 9 பயனாளிகளுக்கு தலா ரூ. 500000 வீதம் ரூ.45 இலட்சம் மானியத்தில் ரூ.97.50 இலட்சம் மதிப்பிலான நிலத்திற்கான ஆவணங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

முன்னதாக, சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு மாவட்ட அளவில் நடைபெற்ற ஓவிய போட்டிகளில் வெற்றி பெற்ற 25 மாற்றுத்திறனாளி களுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)வெங்கட்ராமன், தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி) பாலமுருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் உஷா ராணி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், மாவட்ட மேலாளர் (தாட்கோ) சரண்யா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சந்தைப்படுத்தலுக்கான நிலக்கடலை மற்றும் உளுந்து மதிப்பு கூட்டலை மேம்படுத்துவதற்கான பயிற்சி




வந்தவாசி, டிச 03:

சென்னை பல்லாவரம், வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் ( VISTAS) சார்பில் திருவண்ணா மலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், ஆதிதிராவிடர் சமூகத் தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக திரக்கோயில் கிராமத்தில் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப் படுத்துதலுக்கான DST SEED STI HUB ¬ñò‹ ( DST/SEED//SCSP/STI / 2022/937) மூலம் ‘நிலக்கடலை மற்றும் உளுந்தில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் /மதிப்பு கூட்டலை மேம்படுத்துவதற்கான பயிற்சி’ நவம்பர் 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் VISTAS DST SEED STI HUB மையத் தில் நடை பெற்றது.

இப்பயிற்சியில் வேல்ஸ் பல்கலைக்கழக பேராசிரியரும், இயந்திரவியல் துறையின் இயக்குனரும், பதிவாளருமான DST விதைSTI-HUBமுதன்மை ஆய்வாளருமான முனைவர் எம்.சந்திரசேகரன் நிகழ்வை தொடங்கி வைத்து வரவேற்றார். மேலும் இந்த மையத்தின் சாதனைகளையும் மற்றும் விவசாயிகள் லாபம் ஈட்டும் பயிர் களான நிலக்கடலை மற்றும் உளுந்தை மதிப்பு கூட்டி அதிகப்படியான லாபங்களை பெறும் வழிமுறைகளை விளக்கினார். வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர் எம்.பாஸ்கரன் தொடக்க விழாவில் பங்கேற்று, பல்வேறு விதமான பயிர் அமைப்பு முறை தொழில் நுட்பங்களை விளக்கி, ஆலோசனை களையும் வழங்கி, பயிற்சியின் முக்கியத்து வத்தை வலியுறுத்தினார். தொடர்ந்து சான்று உளுந்து விதைகளை விவசாயிகளுக்கு வழங்கினார்.

முதல் நாள் பயிற்சியினை வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை புல அலுவலர் முனைவர் எம்.அன்பரசு மற்றும் வணிகவியல் துறையில் உதவி பேராசிரியர் ஜி. அமுதா மற்றும் இரண்டாம் நாள் பயிற்சியினை வேல்ஸ் பல்கலைக்கழக வணிகவியல் துறை முனைவர் எ.நவிதா சுல்தானா மற்றும் இயந்திரவியல் துறையில் பணிபுரியும் முனைவர் ஜி.சதீஷ்குமார் ஆகியோர் வேளாண்மை விளைப் பொருளான நிலக்கடலை மற்றும் உளுந்து பயன்படுத்தி பல்வேறு விதமான உணவுப் பொருட்களை தயாரித்தலையும் அதை சந்தைப்படுத்தி அதிக லாபம் ஈட்டுவது பற்றியும் செயல் விளக்கம் அளித்தனர். மேலும் இப்பயிற்சியில் DST STI- HUB திரக்கோயில் கிராமத்தில் பணி புரியும் இரா.விஜயகுமார், வி. லக்ஷ்மி, பூவரசன், பிரசாந்த், இளையபெருமாள் மற்றும் ஏ.மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் தெள்ளாறு ஒன்றியத்தின் கிராமங்களில் இருந்து 100 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந் தனர். இறுதியில் திரக்கோயில் முனைவர் பி.சம்பத் குமார் நன்றி கூறினார்.

## போலி மருந்து தொழிற்சாலை விவகாரம் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை.

### ஆர்எல்வி மக்கள் முன்னேற்றக் கழக மாநில தலைவர் ஆர்.எல்.வெங்கட்ராமன்.



புதுச்சேரி, டிச. 3–

புதுச்சேரியில் பல ஆண்டுகளாக இயங்கி வந்த போலி மருந்து தொழிற்சாலைகளை அரசு ஏன் கண்டுபிடிக்க வில்லை? இதற்கு சுகாதாரத்துறை செயலாளர் என்ன செய்கிறார்? இதற்கு அனுமதி கொடுத்தது யார்? இதற்குப் பின்னால் இருக்கும் “கறுப்பு ஆடு” யார்? என்று அடுக்கடுக் கான கேள்விகளை எழுப்பியுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு: தரமற்ற மற்றும் போலி மருந்துகள் அரசு மருத்துவமனைகள் மற்றும் மருந்து கடை களில் விற்கப்படுவதால் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு வரி இழப்பும் ஏற்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

முதல்வர் மீது விமர்சனம்: முதல்வர் ரங்கசாமி தலைமை யிலான ஆட்சியில் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. “இரட்டை இன்ஜின்” ஆட்சி (மத்திய அரசுடன் இணைந்து) அமைந்தும் கடந்த 4 ஆண்டுகளில் கல்வி, வேலைவாய்ப்பு, குடிநீர், சாலை வசதி, சுகாதாரம் என அனைத்தும் சீர்கெட்டுவிட்டதாக விமர்சித்துள்ளார்.

முக்கிய கோரிக்கை: இந்த போலி மருந்து தொழிற்சாலை விவகாரம் குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும். உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும் என்று ஆர்.எல்.வெங்கட்ராமன் வலியுறுத்தியுள்ளார்.

**தண்ணீர்**

**கொதிக்கவைத்து**

**படிக்க குடிக்க**

**வேண்டும்....**

## தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர் மழையால் ஒரே நாளில் 80 வீடுகள் இடிந்து சேதம்!

தஞ்சாவூர்: டிச.3–

டிட்வா புயல் காரணமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்தது. தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. தொடர்ந்து, நேற்று காலை மழை இல்லாத நிலையில், பிற்பகலில் சிறிது நேரம் வெயில் அடித்தது.

பின்னர், லேசான தூறல் இருந்தது. இந்தத் தொடர் மழையால் மாவட்டத்தில் 15,000 ஏக்கர் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின. வயல்களில் தேங்கிய மழைநீர் வடிவதற்கு ஏதுவாக கல்லணையில் இருந்து காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய் ஆகியவற்றில் பாசனத்துக்குத் திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட் டுள்ளதால், நீர் வேகமாக வடிந்து வரும் நிலையில், 2 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களில் மழைநீர் வடியாமல் தேங்கி பயிர்கள் அழுகி வருகின்றன.

இதேபோல, 200 ஏக்கர் தோட்டக்கலைப் பயிர்களும் மழைநீர் தேங்கி பாதிக்கப்பட் டுள்ளன. தொடர் மழை காரணமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் நேற்று வரையிலான ஒரே நாளில் 46 குடிசை வீடுகள், 34 கான்கிரீட் வீடுகள் என மொத்தம் 80 வீடுகள் இடிந்து சேதமடைந்தன. இதில் மக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை. மேலும்,65 கால்நடைகள் உயிரிழந்துள்ளன என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர் அருகே நாஞ்சிக்கோட்டை, வல்லுண்டாம்பட்டு, அதினாம்பட்டு ஆகிய கிராமங்களில் போர்வெல் மூலம் சாகுபடி செய்யப் பட்டுள்ள 100 ஏக்கர் தாளடி இளம் நெற்பயிர்களும் மழைநீர் தேங்கி அழுகும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவிக் கின்றனர்.

## திருவாரூர்: விளைநிலங்களில் சூழ்ந்த மழைநீரை வெளியேற்ற முடியாமல் விவசாயிகள் திணறல்!

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில் டிட்வா புயல் காரணமாக கடந்த 3 நாட்களாக தொடர்ந்து மழை பெய்தது. இதனால், காவனூர், கருப்பூர், சூரனூர், சத்தியவாடி, நட்டுவாக்குடி, தைக்கால் உள்ளிட்ட கிராமங்களில் 30 முதல் 40 நாட்களே ஆன 5,000 ஏக்கர் இளம் சம்பா பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன. விளைநிலங்கள் அனைத்தும் குளம்போல காட்சியளிக்கின்றன.

மழைநீரை வடிய வைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும், விரைவாக மழைநீரை வடியவைக்க முடியவில்லை. இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் ராஜேந்திரன், தியாகராஜன் ஆகியோர் கூறியது: ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை செலவு செய்து சாகுபடி செய்திருந்தோம்.

கனமழை காரணமாக நெற்பயிர்கள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளன. வடிகால் வாய்க்கால்களை முறையாக தூர் வாராததால்தான் இந்த நிலை ஏற்பட்டது.தற்போதுமாவட்ட நிர்வாகம்பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுப்பு செய்ய தொடங்கி இருப்பது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அதேநேரத்தில் விரைவாக கணக்கெடுப்பு பணிகளை முடித்து, உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்றனர்.

# சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு தன்னார்வலர்கள் விண்ணப்பிக்கலாம்

அரியலூர், டிச.3–

அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதியும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவருமான T. மலர்வாலண்டினா, M.L., அவர்கள் வெளியிடும் செய்திக்குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, அரியலூர் மற்றும் வட்ட சட்டப்பணிகள்குழு ஜெயங்கொண்டம் மற்றும் செந்துறை மூலம் பாமர மக்களுக்கு சட்ட உதவி வழங்கும் வகையில் 50 சட்ட தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட), ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள், M.S.W பயிலும் மாணவர்கள் மற்றும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மருத்துவர்கள், மாணவர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள், சமூக சேவை புரியும் சமூக ஆர்வலர்கள் (அரசியல் சாராத அமைப்பைச் சேர்ந்தவர்கள்), மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் சமூக தொண்டு புரியும் மகளிர் குழுக்கள், திருநங்கைகள், படித்த நல்ல குணம் வாய்ந்த நீண்ட கால தண்டனை பெற்ற சிறைவாசிகள் மற்றும் அடிப்படை கல்வி தகுதியுடைய சேவை மணப்பாண்மை உள்ளவர்கள் இந்த பணிக்கு விண்ணப்பிக்கலாம்.

விருப்பமுள்ளவர்கள் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, அரியலூர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது http://ariyalur.dcourts.gov.in/ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு வாயிலாகவோ விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, விண்ணப்பத்தினை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வருகின்ற 16.12.2025ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. நேர்காணலுக்கான தேதி, இடம் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் மேற்கண்ட இணையதளத்தின் வாயிலாகவும், தபால் மூலமாகவும் பின்னர் தெரிவிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவை அணுகலாம்.

# அரசுப் பள்ளியில் தமிழ்க்கூடல் நிகழ்ச்சி





தமிழகம் முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் தமிழ் கூடல் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன அதன்படி அரியலூர் மாவட்டம சிறுவளூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழ்க் கூடல் நிகழ்ச்சி பள்ளி தலைமை ஆசிரியர் முனைவர் சின்னதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பள்ளி மேலாண்மை குழு கருத்தாளர் இலக்கியா அவர்கள் கலந்து கொண்டு பேசுகையில் உலகில் முதல் மொழியாம் நம் தாய்மொழி தமிழ் மொழியை அனைவரும் போற்ற வேண்டும்.

தமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கண இலக்கியங்கள் உள்ளன.

உலகம் முழுமைக்கும் எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய வகையில் திருக்குறள் நூல் உள்ளது. தொல்காப்பியம் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பாரதியார் பாரதிதாசன் கவிதைகள் எண்ணற்றவை தமிழ் மொழியில் உள்ளன. அத்தகைய நூல்களை கற்று தமிழ் மொழியில் ஒவ்வொரு மாணவர்களும் புலமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தமிழனும் தமிழ் மொழிக்கு ஏதேனும் ஒரு வகையில் தொண்டாற்ற வேண்டும்

அன்னைத் தமிழை அகிலம் முழுவதும் பரப்ப வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் பாரதியார். பாரதிதாசன் கவிதைகள் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

முன்னதாக தமிழாசிரியை அபிராமி அனைவரையும் வரவேற்றார்.

ஆசிரியர்கள் தனலட்சுமி செந்தில்குமரன் வெங்கடேசன் அந்தோணி டேவிட் பயிற்சி ஆசிரியர்கள் கார்த்திகா .காஞ்சனா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். நிறைவாக ஆசிரியை செந்தமிழ் செல்வி நன்றி கூறினார்.

# நாகையில் மழையால் பாதித்த நெற்பயிர்களுக்கு இழப்பீடு கோரி விவசாயிகள் போராட்டம்!

நாகப்பட்டினம்: டிச.3–

நாகை மாவட்டம் கீழ்வேளூர் அருகே புயல் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி விவசாயிகள் நேற்று மழைநீர் தேங்கிய வயலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டிட்வா புயல் காரணமாக நாகை மாவட்டத்தில் பெய்த தொடர் மழையில் 80 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன. கீழ்வேளூர் பகுதியில் மட்டும் 20,000 ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, பாதிக்கப்பட்ட நெற்பயிர்களைக் கணக்கெடுத்து அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கீழ் வேளூர் அருகேயுள்ள வடகரை ஊராட்சியில் மழைநீர் தேங்கியுள்ள நெல் வயலில் இறங்கி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது,"மழையால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். பயிர்களைக் காப்பாற்றுவதற்கான இடுபொருட்கள் வழங்க வேண்டும். கடந்தாண்டு பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை உடனே வழங்க வேண்டும். நிகழாண்டுக்கான பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தர வேண்டும்'' என முழக்கங்களை எழுப்பினர்.

மார்க்சிஸ்ட் கம்யூ. கோரிக்கை: இந்நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் வி. மாரிமுத்து வெளியிட்ட அறிக்கை: நாகை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுத்து ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும்.

மாவட்டத்தில் யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ் உரங்கள் தட்டுப்பாட்டை களைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். புயலால் தொழில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# டிட்வா புயலால் 4 பேர் உயிரிழப்பு; ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு: தமிழக அரசு

சென்னை: டிச.3–

தமிழகத்தில் டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர் என தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். மேலும், நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார். இது குறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது, "கனமழையால் தமிழகம் முழுவதும் 85,521.76 ஹெக்டேர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும். பயிர் பாதிப்பு கணக்கெடுப்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கணக்கெடுப்புக்கு பின்னர் உரிய நிவாரணம் வழங்கப்படும். நிவாரணத்தை உடனடியாக வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். 582 கால்நடைகள் இறந்துள்ளன. 1,601 குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. மயிலாடுதுறை மற்றும் விழுப்புரத்தில் இருவர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர். தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூரில் சுவர் இடிந்து விழுந்து இருவர் இறந்துள்ளனர். அரசு மற்றும் தனியார் வானிலை ஆய்வு மைய கணிப்புக்குள் இந்த மழை வரவில்லை. சென்னையில் தோராயமாக 15 செ.மீ மழை பெய்துள்ளது. சென்னையில் சாலைகளில் விழுந்த 27 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. தூர்வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# "வேலூர்: மின்வேலியில் சிக்கி தந்தை, 2 மகன்கள் பலி; கிராமத்தையே உலுக்கிய துயரம்",

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு தாலுக்கா ஒடுகத்தூர் அருகே ராமநாயினி குப்பம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஜானகிராமன் (55) மல்லிகா(50) தம்பதி. விவசாயம் செய்து வரும் இவர்களுக்கு விகாஷ் (25), லோகேஷ்(23), ஜீவா (22) என்ற 3 மகன்கள் இருந்தனர். இதில், மூத்த மகன் விகாஷிற்கு திருமணமாகி ஒரு குழந்தை இருக்கிறது. லோகேஷ் பெங்களூருவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வருகிறார். ஜீவா தந்தைக்கு உதவியாக ஊரிலேயே நர்சரி வைத்து பார்த்து வந்துள்ளார். இந்த நிலையில், விடுமுறையை ஒட்டி லோகேஷ் ஊருக்கு வந்திருந்தார். ஜானகிராமன் தனது 3 மகன்களையும் அழைத்துக்கொண்டு நேற்று இரவு வயலுக்கு சென்றுள்ளார். இரவு நேரங்களில் காட்டுப்பன்றி உள்ளிட்ட விலங்குகள் பயிர்களை சேதப்படுத்துவதால் அவற்றை நோட்டமிடுவதற்காக அங்கு 4 பேரும் தனித்தனியாக பிரிந்து சென்றுள்ளனர். அப்போது தந்தை ஜானகிராமன் அருகில் இருந்த விவசாய நிலத்தில் வனவிலங்குகளுக்காக வைக்கப்பட்ட மின் வேலியில் சிக்கியுள்ளார். அவரது அலறல் சத்தம் கேட்டு அங்கு ஓடிவந்த மகன்கள் மூவரும் தந்தையை காப்பாற்ற முயற்சி செய்துள்ளனர். ஆனால், தந்தையுடன், விகாஷ் மற்றும் ஜீவா ஆகிய இருவரும் மின்வேலியில் சிக்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். 2வது மகன் லோகேஷ் மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார். இவர்களின் அலறல் சத்தம் கேட்டு வந்த அக்கம் பக்கத்தினர் இதுகுறித்து வேப்பங்குப்பம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், மின்சார அலுவலகத்திற்கு தகவல் கொடுத்து மின் இணைப்பை துண்டிக்கச் செய்தனர். இதனையடுத்து, உயிரிழந்த 3 பேரின் உடல்களையும் மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து, படுகாயமடைந்த லோகேஷை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையின் அனுமதித்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இச்சம்பவம் குறித்து வேப்பங்குப்பம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ஒடுகத்தூர் அருகே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன்கள் என 3 பேர் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் கிராமமே சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

",

# சிதம்பரம் அருகே மழைநீரில் மூழ்கி 5,000 ஏக்கர் நெற்பயிர்கள் சேதம்!



கடலூர்: டிச.3=

தொடர் கன மழையால், சிதம்பரம் அருகே 5 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. பிச்சாவரம் உப்பனாற்றில் ஆகாயத் தாமரைகள் அடர்ந்துள்ளதால் வெள்ள நீர் வடியவில்லை என விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

சிதம்பரம் கிழக்கு பகுதியில் உள்ள கணக்கரப்பட்டு, நற்கவந்தன்குடி, குமாரமங்கலம், வசபுத்தூர், நடராஜபுரம், உத்தம சோழமங்கலம், பிச்சாவரம், கீழப் பெரும்பை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டுள்ள நெற்பயிர்கள் மழை நீரில் முழ்கியுள்ளன.

கடலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் 15,16 ஆகிய தேதிகளில் கனமழை பெய்தது. இதில் சற்று பாதிப்பு ஏற்பட்டு விளை நிலங்களில் மழை நீர் தேங்கத் தொடங்கியது.

இதற்கிடையே கடந்த 3 நாட்களாக 'டிட்வா' புயலால் பெய்த கனமழையால் பாதிப்பு மேலும் அதிகரித்தது. சிதம்பரம் சுற்று வட்டார விளை நிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்கள் மூழ்கியுள்ளன. இதனால் இப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் கூறுகையில்,"20 நாட்களுக்குள் அடுத்தடுத்து பெய்த இரு கனமழைகள் பாதிப்பை அதிகமாக்கி இருக்கிறது. சிதம்பரம் மேற்கு பகுதியில் உள்ள வீராணம் ஏரியின் வடிகாலாக இருக்கும் வெள்ளியங் கால் ஓடை வழியாக வடியக்கூடிய தண்ணீர் பிச்சாவரம் உப்பனாற் றில் வடிந்து வருகின்றன.

இங்கு ஆகாயத் தாமரைகள் அடர்ந்து இருப்பதால் மழை நீர் சரியானபடி வெளியேற முடியாமல் விளை நிலங்களில் புகுந்துள்ளது. பிச்சாவரம் உப்பனாற்றில் உள்ள ஆகாயத்தாமரைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வருவாய்த் துறை, வேளாண் துறை அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட விளைநிலங்களை பார்வையிட்டு ஆய்வு செய்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

கடன் வாங்கி, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30 ஆயிரம் வரை செலவு செய்துள்ளோம். இந்தத் தொகையை முழுமையாக வழங்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தனர்.சிதம்பரம் அருகே கணகரப்பட்டு கிராமத்தில் மழைநீரால் முழ்கியிருக்கும் நெற்பயிர்கள்.

# நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கான பல்திறன் பயிற்சி



வந்தவாசி, டிச 03:

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், வந்தவாசி அடுத்த கண்டவராட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான கற்றல் திறன் செயல்பாட்டு பல்திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் ப.சக்ரவர்த்தி (பொ) தலைமை தாங்கினார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், கலாம் பவுண்டேசன் நிர்வாகி சீ. கேசவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியர் துரைராஜன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி மா.கதிரொளி பங்கேற்று, மாணவர்களுக்கான ஒழுக்க நெறிகளை பற்றியும், கற்றல் திறன் விழிப்புணர்வு தகவல்களை வழங்கினார். மேலும் வட்டார அளவில் நடைபெற்ற கலைத் திருவிழா போட்டியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் ரேவதி, தினேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் ஆசிரியர் செல்வக்குமார் நன்றி கூறினார்.

# அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் 'நாத்து நடும் போராட்டம்' நடத்தி தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அரியலூர். டிச.3–

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியத்திற்குட்பட்ட கல்லூர் கிராமத்தில், வடக்கு வீதியில் உள்ள காங்கிரீட் சாலை பல ஆண்டுகளாக சரியான வடிகால் வசதியின்றி அமைக்கப்பட்டதால், தற்போது குளம் போல தண்ணீர் தேங்கி நிற்பது பொதுமக்களை பெரும் சிரமத்திற்கு உள்ளாக்கியுள்ளது.



ஐந்து ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட இந்த சாலையில், இருபுறமும் வடிகால் வசதி செய்யாததால் மழை காலங்களில் பள்ளம் உருவாகி, சாலை முழுவதும் சேறும் சகதியும் பரவியுள்ளது. இதனால் நடந்து செல்ல கூட வசதி இல்லாமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். குறிப்பாக சிறு குழந்தைகள் டெங்கு, மலேரியா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், மூத்த குடிமக்கள் வழுக்கி விழும் ஆபத்து அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இந்த பிரச்சினையை தீர்க்க ஊராட்சி நிர்வாகத்திடமும், திருமானூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திடமும் பலமுறை மனு கொடுத்தும், நேரில் தெரிவித்து கூறியும் பலன் எதுவும் ஆகாத நிலையில், இன்று பாதிக்கப்பட்ட பொது மக்கள் 'நாத்து நடும் போராட்டம்' நடத்தி தங்களுடைய எதிர்ப் பைக் கண்கூடாக வெளிப்படுத்தினர்.

இது தொடர்பாக பொதுமக்கள் தெரிவித்ததாவது,

"சாலையை போர்க்கால அடிப்படையில் இருபுறமும் வடிகால் அமைத்து, சாலையை மேடாக போட வேண்டும். அப்போது தான் மழைநீர் தேங்காமல் வழியாக ஓடும். எங்களது மனுக்களுக்கு பலமுறை முயன்றும் நடவடிக்கை இல்லை. ஆகவே அரசு கவனத்திற்கு கொண்டு வர போராட்டம் நடத்துகிறோம். மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

போராட்டத்துக்குப் பிறகு ஊராட்சி செயலாளர் உடனடியாக ஜேசிபி கொண்டு வந்து சாலையின் பள்ளங்களை சமமாக்கி,

"நாளை கிராவல் மண் அடித்து சாலையை உயர்த்தி தரப்படும்" என உறுதியளித்துள்ளதாக கிராம மக்கள் கூறுகின்றனர்.

அதே நேரத்தில், மழைக்காலம் முடிந்த உடனே இந்த சாலை முழுவதும் புதுப் புனரமைப்பு செய்யப்பட்டு, சரியான வடிகால் அமைத்துத்தர வேண்டும் எனவும், கல்லூர் கிராமத்தின் அனைத்து வீதிகளிலும் வடிகால் வசதி ஏற்படுத்தி சாலைகளை சீரமைக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421